குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 17 — 3 — 59 செவ்வாய் | இசை: 41

கொலைப்படை வேண்டும்.

பீரிட் டடிக்கும் உடற்குருதி கண்டால்
சோரா திருந்திடப் பழகு – வரும்
போர்வீர னுக்கிதே அழகு !
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

நேரிட்ட போரிலே உன்விழுப் புண்ணில்
நின்பகை நடுமார்பில் நீசெய்த புண்ணில்
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

மீன் உண்ணத் தான்வேண்டும் தேடு! – நீ
மிக உண்ணத் தான்வேண்டும் ஆடு !
நான்உண்ட துண்டு புலிக்கறியி னேடு
நல்லகர டிக்கறியை! உயர்வென்று பாடு
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

ஊன்வாங்க வேண்டாம், உயிரோடு வாங்கி
உடம்பு துடித்திடக் கத்தியைத் தாங்கித்
தேன்வாங்கக் கூடழிப் பான்ஒல ஓங்கித்
திறம்செய்க; உயிரினிற் கண்ணேட்டம் நீங்கி
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

வடபாங்கில் முன்னளில் தமிழரை வென்ருர்
வந்திட்ட ஆரியர்! உடும்பையும் தின்ருர்
இடம்பெற்ற பின்சைவம் மிகநல்ல தென்ருர்
இன்று தேவைப்படல் கொலைப்படை அன்ருே?
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

எண்ணுயிரம் தமிழ் மக்களைக் கழுவால்
இழித்த குருதியைத் தேன்என்ருன் விழியால்
பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை
பைந்தமி ழர்க்கெலாம் உயிரடா விடுதலை
(பீரிட்டடிக்கும் உடற்குருதி)

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ பங்குனி ௪

நீர் ஒரு தலைவரா? II

கேள்வி: நீவிர் யார்?

பதில்: நான்தான் மாவட்டத்தலைவன்.

கேள்வி: திராவிடர் கழகப் போராட்டத்தில் கடைசி ஐந்தாண்டின் நிலை என்ன?

பதில்: உயிரைப் பணயம் வைத்துப் (கவர் அன்று) போராடுகின்றது நம் கழகம்.

கேள்வி: போரின் நோக்கம்?

பதில்: தமிழக விடுதலை.

கேள்வி: இதில் பெரியாரின் அரிய கருத்துக்கள், அரியஉழைப்பு அச்சாநெஞ்சு பயன்பட்டது தவிர உம்மால் ஏற்பட்ட பயன் என்ன?

பதில்: ஏனில்லை? கூட்டங்கள் நடத்தினேன்.

கேள்வி: பெரியாரைக் காட்டித்தானே?

பதில்: மாநாடு பெரிதாக நடத்தினேன்.

கேள்வி: பெரியாரைக் கொண்டுதானே!

பதில்: பெரியாருக்கு நான் ஏற்பாடுசெய்த வரவேற்பில் எத்தனை இலக்கம் மக்கள்?

கேள்வி: பெரியாருக்காக மக்கள்வந்தார்கள் இல்லையா? குறிப்பிடத்தக்க வகையில் நீர்!... நீர்செய்தது என்ன? நீர்செய்ததாகச் சொல்லும் தொண்டில் உன்பெயர் இருக்கவேண்டும் வேறு பெயர் இருத்தல் கூடாது. அப்படிச்செய்ததொண்டில் ஒன்று சொல்லுக.

பதில்: அப்படிப்பட்டதாக நான் என்ன செய்யவேண்டும். சொல்லுங்கள் பார்ப்போம்.

கேள்வி: நீர் எப்போதாவது ஒரு தமிழனைக் கண்டு-இயக்க ஏடான விடுதலை வாங்க வேண்டிய இன்றியமை குறித்துப் பேசியதுண்டா? வாங்கச் செய்ததுண்டா? இயக்க வெளியீடுகளைப் பரப்ப முயன்றதுண்டா? உன் மாவட்ட மக்களிடம் சென்று இயக்கத்தில் உறுப்பினராகச் சேரக் கேட்டுக் கொண்டதுண்டா? எங்கும் தி. க. மணிக்கொடி பறக்க முயன்றதுண்டா? மாவட்டத் தலைவரே இவைகளைச் செய்திருந்தால் நீர் செய்தீர் அரும்பணி.

பதில்: இல்லாவிட்டால்?

கேள்வி: நீர் ஒரு தலைவரா?

*—

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு.
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50,
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ.100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0-15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

சிறுகதைப் பகுதி.

படம் இயக்கி (Director) யின் தங்கை!

'வேலனுக்கு விண்ணப்பம்' என்ற கதையின் படப்பிடிப்பு நடைபெறுகின்றது. பொன்னம்மா நாட்டியக்காரியாகச் சோடிக்கப்பட்டு படம் இயக்குவோனின் எதிரில் வந்து நிற்கின்ருள்.

படமுதலாளியும் படம் இயக்குவோனும் கொண்ட மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை.

அவளின் பெருத்திருந்த மார்பை நான்கு விரற்கடை அகலமுள்ள ஒரு கச்சை சுற்றி வந்து முதுகின்புறம் முடியிட்டுக் கொண்டிருந்தது- தாவணி இல்லை.

ஆடினுள்! பாடினுள்! படப்பிடிப்பு நல்லபடி முடிந்தது,

'வேலனுக்கு விண்ணப்பம்' வெளிவந்து ஏறத்தாழ பன்னிரண்டு கிழமைகள் ஓடியது. படத்தின் வெற்றிக்குப் பொன்னம்மாவின் சோடிப்பே காரணம் என்று நம்பினுர்கள் படமுதலாளியும் படஇயக்கியும்!

சில திங்கள் சென்றன. படம் இயக்கியின் இரண்டாவது தங்கை தங்கத்தின் ஆடல் அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 'வேலனுக்கு விண்ணப்பம்' என்ற படத்தின் முதலாளியும் மற்றும் குறிப்பிடத்தக்க பலரும் வருகைதந்து அரங்கேற்று விழாவைச் சிறப்புறுத்தினுர்கள்.

'வேலனுக்கு விண்ணப்பம்' என்ற படமுதலாளி தங்கத்திற்கு ஓர் உறுதி கூறினுன்– "நான் எடுக்கப்போகும் அடுத்த படத்தில் நீதான் தலைமை நாட்டியக்காரி"

'சேயிழையின் சிரிப்பு' என்ற கதையின் படப்பிடிப்பு நடைபெறுகின்றது. சோடிப்பு அறையினின்று தங்கம் வெளிவருவதை முதலாளி ஆவலுடன் எதிர்பார்த்து நின்ருன். தங்கம் வந்தாள்; அவள் முன்படத்தில் பொன்னம்மா போலவே சோடிக்கப்பட்டிருந்தாள்.

படமுதலாளி, சற்று நேரம் சொக்கி நின்று மிக்க நன்று என்ருர். அதேநேரத்தில் படம் இயக்குவோன், தங்கச்சி ஓடு உள்ளே என்று அதட்டினுன். தங்கம் சோடிப்பு அறைக்குள் ஓடி மறைந்தாள்.

சோடிப்பவனை "வேலு!வாஇங்கே" என்ருன் அவன் எதிரில் வந்துநின்ருன்-"யார் இப்படிச் சோடிக்கும்படி உனக்குச்சொன்னவர்?" என்று கேட்டான் அதற்கு அவன் முதலாளியைக் காட்டினுன்.

முதலாளி அதே சோடிப்பவனை நோக்கி, முன்படத்தில் பொன்னம்மாவுக்கு அப்படிச் சோடிக்கச்சொன்னவர் யாரென்று கேட்டான் அதற்குச் சோடிப்பவன் படம் இயக்குவோனைக் காட்டினுன்.

படம் இயக்குவோனுக்கு எண்ணத்தைப் பொத்துக் கொண்டு எரிச்சல் கிளம்பி விட்டது அவன் முதலாளியை நோக்கி "ஐயா முதலாளியாரே! தங்கம் என் தங்கை அவளுக்குமா இப்படிப்பட்ட அருவருக்கத் தக்க சோடிப்பு?"

எண்ணத்தில் ஆழ்ந்து எழுந்த முதலாளி படம் இயக்குவோனை நோக்கி "ஐயா படம் இயக்குவோரே தங்கம் உங்கள் தங்கை! பொன்னம்மா?"

நினைவுறுத்துகிரேம் . . . !

இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

–அமைச்சர்,

வளர்க தமிழ்! வாழ்க காந்தீயம்!

10-3-59 அன்று குருவிக்கரம்பைக்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் வருகை தந்தபோழ்து ஊராட்சி மன்றம் படித்தளித்த

வரவேற்புரை

கவிஞரே! கனகமே! இரத்தினமே!!

வருக! பார்போற்றும் பாவேந்தே வருக! பாரதிதாசனுரே வருக! பைந்தமிழே, கவிக்குயிலே, தீந்தமிழ் தன்னைத் தென்றலிற் பரப்பிவிடும் திண்ணியரே! தங்கள் கவிதை மணம் பரக்கக் களித்திருக்கும் இவ்வூர், இன்று வருகை ஒளிவீச வனப் படைந்து விளங்குவதுகண்டு ஊராட்சி மன்றம் உள்ளம்பூரித்து உவகை கொள்கிறது. வருக வருகவென வரவேற்கின்றது!

எண்ணியவற்றை எஞ்சாது;

எடுத்துரைக்கும் அஞ்சா அடலேறே!

ஒரு நாட்டின் தொன்மை அந்நாட்டின் மொழியாலேதான் அறியப்படுகிறது அம்மொழியிலேதான் மக்களின் கல்வி, கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவையும் அமைந்து கிடக்கின்றன. என்பதையெல்லாம் அறிகிறோம். உலகம்போற்றும் உயர் தனிச் செம்மொழி தமிழ்மொழி. இவ்வுண்மை சங்ககால இலக்கியங்களைப் படிக்க முடிந்தவரால்தான் அறியமுடிகிறது. மற்றவரால் இயலவில்லை. கன்னித் தமிழிற் காணும் இன்பமும் எல்லோர்க்கும் இல்லையாயிற்று. அவ்வின்பம் எல்லோர்க்கும் எட்டும்படிச் செய்தது தங்களின் **கவிதைப் புதுப்பாதை**. அம்மட்டோ! மக்களிடையே மலிந்து கிடந்த கூடாத எண்ணச் செயல்களைக் கூண்டோடு ஓட்டிற்றுத் தங்கள் வுன்மைமிக்க **எழுத்துக்கள்**. இம்மட்டோ!! எதனையெடுத்தாலும் பிற மொழியிலிருந்து வந்தவை என்று பேசித்திரிவோரின் நாவையடக்கிற்றுத் தங்கள் பேச்சு. எனவே தமிழ் மொழியைக் காத்து வளர்க்கும் தங்களைச் 'செந்தமிழ்க் காவல!' என விளித்துத் தாங்கள் பொருநையாற்றின் மணலினும் பலவாய யாண்டுகள் வாழ்கவென வாழ்த்தி, வருக வருகவென இவ்வூர் ஊராட்சி மன்றம் வரவேற்கின்றது.

இங்ஙனம்.

குருவிக்கரம்பை 10—3—59

ஊராட்சி மன்றம்,
குருவிக்கரம்பை.

அந்திமாலையே வருக! வாழ்க!!

"கயல்விழி"

வையம் பகல் கழிக்க வானம் ஒளியிழக்கவந்த அந்திமாலையே!

செஞ்சொல் உதிர்க்கும் சேயிழையார் திங்கள் வான்முகம் துலக்கி, தாதுபடு நறுமலர் பலவற்றைக் கூந்தலிற் சூடி, காதலர் வரவை எதிர்பார்த்து நின்று ஏங்க வைப்பதில் உனக்கு அவ்வளவென்ன ஆனந்தம்?

கதிர்விழுங்கி மதியுமிழந்து வந்த அந்தி மாலையே! காதலனுடன் கூடியுறையும் காதலியினது நெஞ்சத்தைப் பொங்கியெழச்செய்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்து அன்னவர்தம் உயிரையும் உணர்வையும் மகிழ்விக்க எங்கு கற்ருய்?

பறவை பாட்டடங்க பகலவன் போய்வீழவந்த அந்திமாலையே! உந்தன் வருகையைக் கண்டவுடன் கோலவண்ணச் சிற்றிடையார் குஞ்சி திருத்தி, கொஞ்சி மகிழும் பிள்ளைக் கனியமுதை உடனழைத்து வெளிச்செல்ல விரும்பவைக்கும் வகைதனை வகுத்தெடுத்துக் காட்டாயோ?

'கார்வானில் குழவித் திங்கள் முகிழ்த்திட முன்னோடியாய் வந்த அந்திமாலையே! சிரித்துச் செழித்து ஆடிஅசைந்து மகிழ்ந்துவரும் உன்றன்வருகையைக் கண்டவுடன் கார்கண்ட களிமயிலேபோல், வல்லிக் கொடியனையார் ஆர்த்தெழுந்து புத்துள்ளம் கொண்டு, புன்முறுவல்காட்டி காதலனை நேசமுடன் அழைத்தெடுத்து அருகமர்த்தி – கொஞ்சிப் பேசிக் கூடி மகிழ வைக்கும்வித்தைதனை எனக்கு விளக்கிக் கூருயோ?

மஞ்சள் வெயில் சிந்திவரும் அந்திமாலையே! நெஞ்சக்கடலில் மகிழ்ச்சி பொங்கிப் பெருக, மாந்தளிர் மேனியனையார் நடையில் இன்பம் துள்ள, நெளிவில் சிந்தை நிறைவு தெரிய பார்வையில் கனிவு குளிர, அழகுப் பெட்டகமாய், கட்புலனுக்குக் காணும் ஓர்எழில் அமைதியாய் ஆக்குதற்கு நீ மேற்கொள்ளும் சூழ்ச்சிதான் யாது?

தென்றல்சிறக்கத் தேரேறிவந்த அந்திமாலையே கட்டிளங் கன்னியர்தம் உள்ளங்களைத் தொட்டிழுத்துக் கிறுக்கேற்றும் கொல்லி மலைப் பாவையனையாரை, பரந்து விரிந்த சாலையிலும் சோலையிலும் செஞ்சொல்லுதிர்த்தபடி செவ்வுதடு தெரியசிரித்துச் செல்ல வைத்து ஆடவர் நெஞ்சைச் சூறையாட வைக்கும் வகைதனைக் கூறுவாயா? மாட்டாயா?

வளைக்கரத்தாள் வாசல் பெருக்கிக் கோலமிட வந்த அந்திமாலையே? மல்லிகையும் முல்லையும் மருக்கொழுந்தும் அந்திப்பொழுதில் பிறந்த பயனைத் துய்ப்பது போல், பாவையர்தம் கருங்குழலிற் கலந்தாடி கூடியுறையவைக்கும் இரகசியத்தைக்காதொடு காதாய் எனக்கு மட்டும் கொஞ்சம் கூருயோ!

குலமகள் குத்துவிளக்கேற்றக் கூடிவரும் அந்தியே? உன் வரவு கண்டு வண்ண மலர்கள் வளர்ந்துவிரிந்து நிற்பதுபோல பூவெனப்பொலிந்து மென்மைதவழ நிற்கும் மெல்லியலார்தம் அகத்தையும் புறத்தையும் ஒருங்கேமலரவைக்கும் புதுமையை எனக்குக் கொஞ்சம் புகலாயோ!

திங்கள்வான் முகத்துச்சிறுநுதலில் பொட்டிட்ட போழ்தில் வந்த அந்தியே? பாவையர்தம் சுழன்ருடும் மைதிட்டிய கருவண்டுக் கண்கள் மழவிடை போன்ற காளையர்தம் உள்ளத்தைக் கொத்திப் பிடுங்கிக் குழலிடைச் செருகிக்கொள்ளும் கதையை கொஞ்சம் கிளந்தெடுத்துக் கூருயோ!

உள்ளம் துடிதுடிக்க உயிர்பதைக்க வந்த அந்தி மாலையே? உன்னை நல்லவன் என்றும் வல்லவன் என்றுமே கேட்டுப் பழகியிருந்தேன் நான். ஆயின் அந்திப்பொழுதே-நீ காதலனைப் பிரிந்த காதலியர்க்கு முந்திக் கிளர்ந்து முனைந்தெழுந்து ஆவியுண்ண நிற்கும் அந்தகனுயும் ஆகின்ருய் என இப்பொழுது கேள்வியுறுகிறேன்.

புன்மாலை அந்தியே? நீ கொடியனும் – காதலனைப் பிரிந்த கதலியர்க்கு. உண்மையா? ஒளிவு மறைவின்றிக்கூறு. நீ எங்கே பதில் கூறப்போகிருய் இதோ எங்கள் கலித்தொகை கண்ட பாவலன் கூறுகிருன்–நீ கொடியோன் என்று. துள்ளும் மான் ஒன்றை நோக்கிக் கணைதொடுக்கும் கூற்றுவனும் நீ!

புற்கென்ற அந்தியே? கூடிப் பிரிந்த கொழுநனை நாடி நோக்கி நலிந்து நசிந்து நிற்கும் இவளுடைய நிலைநோக்கி வாளா இராமல் வெந்ததோர் புண்ணில் வேல்கொண்டு நுழைப்பதுபோல் அந்தியாய் உருவெடுத்து ஆருயிரைக் கவர எங்கு கற்ருய்?

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

இலட்சம்

இது இலக்கம் என்ற தூய தமிழ்ச்சொற் சிதைவு. ஒன்றினும் ஒளியுடையது பத்து; பத்தினும் ஒளியுடையது ஆயிரம்; ஆயிரத்தினும் ஒளியுடையது பத்தாயிரம்; பத்தாயிரத்தினும் ஒளியுடையது நூறாயிரம். ஒளி–புகழ்; கவர்ச்சி அடையத் தக்கது.

எல்லே இலக்கம் என்பது தொல்காப்பியம் இலக்கம் என்பது அம் சாரியையின்றி இலக்கு என நிற்பதும் உண்டு.

லட்சம் என்ற வடசொல்லினின்று இலக்கம் வந்தது என்று ஏமாற்றுவார் சொற்கள் கான்றுமிழத்தக்கவை.

தமிழன் வடசொற்காரர் சிதைத்தபடி லட்சம் என்றோ இலட்சம் என்றோ எழுதாமல் இலக்கம் என்ற சிதையா தூய தமிழ்க் காரணப் பெயரையே எழுதுக, பேசுக.

கோடி

இதையும் வடசொற்காரர் வடசொல் என்றே கூறிப் பிழைப்பர். எண்ணின் உச்சி என்பது பொருள். ஆதலின் கோடி. (நூறு இலக்கம்) தூய தமிழ்க்காரணப் பெயரே என்று கடைப்பிடிக்க.

அந்தியே! என்று உலகு தொடங்கியதோ அன்று பிறந்த நீ என்று உலகழியுமோ அன்றுதான் அழிவாய்.

நீ ஆடலரசி மாதவியைக் கண்டிருக்கிறாய். கற்புக்கரசி கண்ணகியின் கண்ணீரை சுவை பார்த்திருக்கிறாய். அமராவதியை உனக்குத் தெரியும். கிளியோபாட்ராவின் காதல் லீலைக்கு நிலைக்களனாக இருந்த தங்க அங்கத்தளிர்மேனி உன்பார்வைக்குத் தப்பியிருக்க முடியாது. அழகின் அமைவான அழகிகள் – அரசிளங்குமரிகள் – கோலவண்ணப் பாவையரைப் பார்த்த நீ–இன்னும் உன்வேட்கை தீர மனமில்லாமல் நித்தமும் வந்து நல்லுடல்கொண்ட மெல்லியலார் தம் ஒப்பனை அனைத்தையும் ஒருங்கு பெருக்கிக் காட்டும் நேரத்தில் அதைக் கண்குளிரக் கண்டு சுவைத்து மகிழ்ந்து ஓடி ஒளிந்து கொள்கிறாய். நல்லவனாயின் – வல்லவனாயின் – நேர்மையுள்ளம் கொண்டவனாயின் ஓடி ஒளிய மாட்டாயே. அற்பநேரத்தில் வந்து உலகையே ஆட்டிப்படைத்து விட்டு ஓடிஒளியும்நீ ஒரு கள்வன்–கயவன்–காமுகன் என்று கூறுகிறேன். அந்தியே! இவ்வாறு கூறுவதால் உனக்கு என்மீது கோபமா?

அழகு பெருக வந்த அந்தியே! உனக்குத் தெரியும்–உன்னை இவ்வாறு திட்டுதல் உன்மேல் எழும் பேரன்பின் மிகுதியால் என்பது. உன் வரவு இல்லையெனில் வாடிவதங்கி நிற்கும் உள்ளத்திற்குத் தெம்பூட்டும் தோகையரின் ஒப்பனை மிக்க ஓவியத்தைக் காண முடியுமா? செவ்வுதடு தெரியச் சிரித்து, மகிழும் கணவன் மனைவியரது அன்பின் பெருக்கத்தை உணர முடியுமா? உன் வரவில்லையெனில் உலக உயிர்க்கே உயிர்ப்பளிக்கும் ஒண்டொடி மேனியர்தம் எழிலமைதியின் நிறைவைக் கண்களால் எட்டித் தீண்டிச் சுவைத்து மகிழ முடியுமா?

உலகையே எழில் வண்ணமாக்கிக் காட்டும் அந்தி மாலையே!– உன்தன் வருகைக்கு என்றும் வரவேற்புண்டு. நீ வருக!! வாழ்க!!!

விற்பனையாளர்கட்கு...!

இதுவரை பணம் அனுப்பாத விற்பனையாளர்கட்கு முன்னறிவிப்பின்றிக் குயில் அனுப்புவது நிறுத்தப்படும்.

–அமைச்சர்.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

சோழன் :

நுணுகி அறிக மணியின் ஓசை!
யானை வருவதற் கான குறிப்பே!
யானை அதுவும் ஆந்தையார் யானையே
நண்ணும்அவ் வியானையை நடத்துவார்
[நண்பரே

பொத்தியார் :

என்சிற் றறிவிற் கெட்டடவே யில்லை
அரசர் கண்ணும் ஆந்தையார் கண்ணும்
ஒன்றின் ஒன்று புதைந்த தாகக்
கண்டு மறியேன் கேட்டும் அறியேன்!

சோழன்:

சேய்மையிற் கேட்ட மணிசெய் ஓசை
அண்மை கேட்ப தறிக ஐயா
அதோ மீனக்கொடி! அதோ படைமுழக்கம்

பிசிராந்தையார் தனியே கால் கொண்டு ஓடி வந்து கோப்பெருஞ் சோழனைத் தழுவிக்கொள்ளுகிறார், பின்னே பாண்டியன் அறிவுடை நம்பி முதலியோர் தேர் முதலிய விட்டிறங்கி வடக்கிருத்தற்கு அமைந்த பிசிராந்தையாரையும் கோப்பெருஞ் சோழனையும் தொழுது நிற்கின்றார்கள். பொத்தியார் வியப்பில் ஆழ்கின்றார்.

பொத்தியார்: எதனினும் பெரிது இவன் பெற்றதலைமை. இத்தனைபெரியதலைமையுடைய கோப்பெருஞ்சோழன் தனக்குள்ள சிறப்புக்களை எல்லாம் துறந்து வடக்கிருத்தற்கு வரத் துணிந்ததை நினைக்க வியப்பு! வேற்றரசனால் காக்கப்பட்டும் புகழே பெரிதென எண்ணியும் நட்பே அதற்குப் பற்றுக்கோடு எனஎண்ணியும் இந்தப்பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் துன்பப் போதில் இவ்விடத்தில் வந்தது வியப்பினும் வியப்பே!

இவ்வாறு பிசிராந்தையார் வருவார் என்று துணிந்து சொன்ன வேந்தன் மேன்மையும், அவ்வாறு வேந்தன் கூறியது பழுதுபடாது வந்த பிசிராந்தையாரின் அறிவும் வியக்குந்தோறும் அவ்வியப்பு வளர்கின்றது. ஆதலால் தன் செங்கோல் செல்லாத இடத்திலும் சென்றேன் என்ற நெஞ்சுடையானை இழந்தால் இந்த நாடு இடும்பையுருதோ? இரங்கத் தக்கது அதுதான்.

புலவர் பொத்தியாரும் மூன்றுவதாக ஓர் இடந்தேடி வடக்கிருக்கலானர்,

காட்சி ௧௧.

இடம்: *வடக்கிருந்த இடம், சோணுடு.*

காலம்: *ஒருநாள் முன்மாலை.*

துறந்தார் பெருமை

நிலை: *கடல்போற் சூழ்ந்த மக்கள் கை கூப்பிநிற்கின்றனர். அமைச்சரின் வேண்டுகோள்!*

அமைச்சன்:

துன்பம் சிறிதும் சுவைத் தறியீரே
அன்பின் வேண்டுகோள் அகற்றல் ஆவதோ
குடலைப் பற்றிய கொடும்பசிப் பெருந்தீ
உடலை உறுத்த உயிரும் பொறுக்குமோ
நீவிர் படுந்துயர் யாவரும் பட்டனர்
சாவீர் காவீர் தடுக்க எண்ணேம்
இச்சோறு நெய்ச்சோறு சிறிதே
மெய்ச்சோர்வு மிகாமை உண்ணுக வேந்தே.

சோழன்:

உண்ணேம் உணவு பருகோம் ஒருதுளிநீர்
எண்ணேம் உலகை இனி.

பிசிராந்தையார்:

இனித்திருக்கும் எங்களின் சாவும்! எமக்குத்
தனித்திருக்கும் வாய்ப்பளிப்பீர் சற்று.

புலவர் பொத்தியார்:

சாவோம் ஒருநாளும் சாவாமை காண்கின்றோம்
நோவாது செல்க நும் வீடு.

(அனைவரும் நீங்கா உயிரோடு நீங்கு கின்றனர்கள். என்பில் ஓட்டிய தசை யுடம்புகள் மூன்றுமட்டும் அங்கே)

காட்சி ௩௨

இடம்: சோணாட்டில், வடக்கிருக்கும் இடம்

காலம்: ஒருநாள் மாலை

உறுப்பினர்: பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழன், புலவர் பொத்தியார், இளங்கோச்சோழன், அவனுக் கிளையவன், உலக மக்கள்.

காட்சித் தலைப்பு:

உயிரினும் நட்புப் பெரிதே

நிலை: கோப்பெருஞ்சோழனின் மக்கள் இருவரும் மன்னிப்பு வேண்டி அழுகின்றனர்கள்.

இளங்கோச்சோழன்: *(தன் தம்பியுடன் ஓடிவந்து தந்தையின் திருவடி பற்றிக்கொண்டு)*

உலகமெலாம் புகழும்நும் ஆட்சியை ஒழிதிடக்
கலகம் செய்தோம் கலகம் செய்தோம்
சிறியேம் பெரும்பிழை செய்தோம் பெரியீர்
பொறுத்தருள் புரிக பொறுத்தருள் புரிக.

இந்த உலக மக்கள் எம்மை
கொந்திக் கொலைசெயா திருக்கத் தந்தையீர்
வடக் கிருத்தலை விடத்தான் வேண்டும்

நீவிர் உயிர்விட நினைந்ததற்கு
யாமே காரணம் என்று ஞாலம்
எண்ணிற்று. யாமினி வாழ்வ தெங்கே?
வாழினும் யாம்கொள் ஆட்சி
வாழ விடுமோ நும்பெரு ஞாலமே?

கோப்பெருஞ்சோழனின் திருவடியில் கிடந்த இரண்டு தலைகள் நிமிர்கின்றன; தந்தை முகத்தை நோக்குகின்றனர் மக்கள் இருவரும். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் பொத்தியார் ஆகிய மூன்று உடல்கள் உயிர் அற்றுச் சாய்கின்றன.

அனைத்தும் ஆகிய பெரியார்!

இராங்கியம், எழில்வழுதி.

நானும் தமிழர் நலமொன்றே நெஞ்சிருத்திக்
கோளும் நினைவும் தமிழாக - வாழும்
பெரியாரே நம்மன்னை! பேசும் மழலைக்
குரியாரே நற்றமிழ ரோது!

இவ்வழிச் செல்வீர் இனிய நலம்பிறக்கும்
செல்வழி எய்திச் சிறப்படைவீர்! - உய்வழி
நானும்ஈ தென்று நமக்கே உணர்த்துவதால்
வாழும்தந் தையெனவே வாழ்த்து!

பண்பும் பகுத்தறிவும் பாராளும் நற்றிறமும்
அன்பும் அறவழியும் செல்லாறும் - முன்பு
முதற்கொண் டுணர்த்திவரும் மூதறி வாளன்
முதற்குருவாம் என்றே மொழி!

சாதி மறுத்துத் தமிழர் குலந்தழைக்க
வேதம் மறுத்தந்த வேதியரின் - பாதம்
வணங்கும் இழிபண்பை மாற்றி அமைத்த
வணங்காத் தலைவனென வாழ்த்து!

குன்றத்துத் தோளோடும் கூர்த்த திறத்தோடும்
இன்றே தமிழர் இணைந்திடுக! - வென்றாளப்
போர்க்கே விரைந்து புகழ்சேர்க்க என்றுணை
சேர்ப்பதனால் வேந்தனெனச் செப்பு!

<★>

மக்களிருவர்: ஐயோ இறந்தாரே உய்வ தெப்படி?

(என்று அரற்றி விரைந்து ஓடுகின்றனர்கள்)

மூன்றுடல்கட்குமுன் உலகம் கைகூப்பி நிற்கின்றது.

உலகம்:- பாடுகின்றது:

நண்புக் குயிர்தந்தான் நண்பு பெரிதென்றான்
உண்மை உடையான் பிசிராந்தை நற்பெயர்
தெண்ணிலவும் செங்கதிரும் உள்ளநாள் [வாழியவே
எண்ணுலவி நல்லறம் என்றென்றும் வாழியவே

முற்றும்.

வெண்பா வினு விடை

வினு: முதலிரண்டு அடிகள். விடை: ஈற்றிரண்டடிகள்

வினு: இராங்கியம். எழில்வழுதி, சேலம். விடை: சித்தன்

தாசன் கொடையாளன் தானென்றீர்; பாரதிக்குத்
தாசனுர் தந்த தகவென்ன? — தாசர்,
தடையெதற்கும் அஞ்சாமல் தன்னையவர்க் கீந்தார்;
கொடையிதனின் உண்டோநீ கூறு?

வினு: ஆதிரை, அரியங்காட்டி சிதம்பரம். விடை: சித்தன்

சித்தனென்றும் முத்துவென்றும் சிந்தைக் குணவளிப்பீர்
எத்தன்மை நுங்களது யாவர்நீர்? – வித்தைத்
தமிழ்மா ணவர்நாங்கள்! தண்புதுவை எம்மூர்;
தமிழ்த்தொண்டே எங்கள் தவம்!

வினு: செ. பாலசுந்தரம், அரக்கோணம். விடை: சித்தன்.

பூக்கள் மலர்வதேன்? புட்களெலாம் பாடுவதேன்?
தூக்கம் தொலைந்தோடிப் போவதேன்? – தேக்கும்
இருள்நீக்கிக் காலை இளம்பரிதி வந்தால்
பெருமகிழ்வு கொள்ளாரியார் பேசு!

வினு: கோ. சுவாமிநாதன், தென்கச்சி. குடந்தை. விடை: முத்து

கனியாய்த் தமிழ்நூல் பலவிருக்க நீங்கள்
இனிதாய்ச் சுவைப்பதுதான் எந்நூல்? - இனிய!கேள்!
வானும் பெரும்புகழை வையத்தே பெற்றுத்தீந்
தேனுய்த் திகழும் குறள்.

வினு: மு. இ. கிருட்டினன், புதுவை. விடை: முத்து:

சீர்க்குமர சாமியவர் செய்த பெருந்தொண்டென்?
ஓர்நிதியம் தூக்கி உதவுதற்கே? – நேர்பெறவே
நல்ல இலக்கணத்தை நம்புதுவை நன்கறிந்து
வெல்ல உழைப்பவரிவ் வேள்.

வினு: அன்பரசன், தேவதானப்பட்டி. விடை: முத்து.

தங்கத் தமிழ்மொழியில் செத்த வடமொழிதான்
தங்கிக் கலந்த தகைமைசொல் – சங்க
நடையிலே° அந்தமொழி நாடவில்லை; எல்லாம்
இடையிலே வந்த இடர்.

°சங்கநடை – சங்கத் தமிழ்நடை

செய்தி

முத்துப்பேட்டையில் பாவேந்தர்

9-3-59 திங்களன்று மாலை 6 மணி அளவில்முத்துப்பேட்டையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திற்குத் தோழர், தோலி - சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினர். கழகத் தோழர்கள் சிலர் பேசினர்கள். அவர்களில் தோழர் இளம்பரிதியின் பேச்சுக் குறிப்பிடத் தக்கது. அதன்பின் பேருரை நிகழ்த்திய புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழர்களின் இன்றைய நிலையைக் கூறி, இனி இருக்க வேண்டிய நிலையையும், தமிழ்நாடு பிரிவினை தமிழர் எல்லோருக்கும் நன்மை பயப்பதே ஆகும். இதில், அந்தக் கட்சிக்காரன் இந்தக் கட்சிக்காரன் என்ற வேறுபாடு கொள்ளாது-நாமெல்லாம் தமிழ் மக்கள்-தமிழகம் நமது தாய்நாடு என்ற ஒரே நோக்கத்துடன் தமிழகத்தை மீட்கப் போராடுவோமாக - என்று சொல்மாரி பொழிந்தார்.

—வாசுகி கலா மன்றத்தினரின் இன்னிசை முழக்கத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

-செய்தி அறிவிப்பாளர்

வந்திடு கிளியே!

புலவர் புதுமதியன், புதுப்பாளையம்.

எண்ணமெனும் வீட்டில் இதய விளக்கடியில்
கண்ணிமைக்கும் முன்னே கணக்கின்றி வந்ததுவால்!
'என்னைத் தெரியலையா ஏனத்தான் பார்க்கின்றீர்
தென்னைமரத் தோப்புள் தேனிலவைப் பாரென்றும்
மொட்டுவைத்த கூட்டில் முதல்நாளில் பார்த்திருந்த
சிட்டுக் குருவியதன் சின்ன இளங்குஞ்சை
எட்டிப்பார் வந்தென்றே என்னை இருகரமும்
தொட்டிழுத்துப் போன தொடர்பெல்லாம் உண்மையிலே
எப்படித் தான்மறந்தீர்! ஏனத்தான்! என்ருள்;வெண்
சிப்பிதரும் முத்துச் சிரித்ததெனத் தான்சிரித்தே
இவ்வாறு பேசியென்றன் எண்ணத்தின் மத்தியிலே
எவ்வாறு வந்தாள்! இதயம் குடிபுகுந்தாள்!
அன்பிற் கினியவளே ஆசைக் குரியவளே!
என்பால் மனஞ்செலுத்தும் என்னிதயப் பெண்ணரசி!
உன்னை மறப்பேனே? ஒண்டமிழைக் கற்றபடி
என்னை மறந்தாலும் என்னிதயம் நீயிருப்பாய்!
வெள்ளி நிலவொளியில் வெண்மணலில் காவிரியில்
பள்ளிகொண்ட வாறே பகர்ந்துண்டோம் இன்பமெலாம்!
வாழைத்தோப் போரம் வளர்ந்திருக்கும் பூங்காவுள்
ஏழைபெருஞ் செல்வம் எதிர்கண்டாற் போலுன்னைக்
கொள்ளை அடிப்பதற்குக் கோடிமுறை நான்முயன்றும்
கிள்ளைமொழி உன்றன் கிளிமூக்குச் செவ்விதழின்
முத்தங்கள் தந்தே முறியடித்து விட்டாய்நீ!
நித்தம் அதன்நினைவு நெஞ்சைக் குடையுதடி!!
கன்னம் சுவைத்தறிந்தேன் கண்மணியே! ஆதலினல்
அன்னம் சுவைப்பதில்லை! அண்டம் நினைவிலில்லை!
வட்டமதி வான்வரிலுன் வண்ணத் திருமுகத்தின்
கட்டழகைக் காண்பேன் களிப்புறுவேன் சின்னேரம்!
காட்டுமலர் மீதாடிக் கானருவி நீராடி
வீட்டுமலர்ப் பந்தலிலும் வீழ்ந்தடித்துக் கொண்டுவரும்
தென்றல் உடல்நீவித் தாவுகையில் நீவந்து
நன்ருய் மலர்க்கையால் நெஞ்சைத் தழுவுதல்போல்

நாட்டினை நாசமாக்க...!

S. நளகுமார், சென்னை.

எடுப்பு

வேலினைக் கையில் ஏந்தி, வாம்பரி மீதில் ஏறி
மாலையில் வந்தவன் யார் தோழி? (வேலி)

உடனெடுப்பு

சேலையை இழுத்தாண்டி-நான் திரும்பினேன் சிரித்
[தாண்டி (வேலி)

அடிகள்

உள்ளங் கவர்ந்திட்டானே - என்றன்
உடலும் மெலிகுதடி!
கள்ளனே ஒருவேளை — என்றன்
கைவளை காணேமடி! (வேலி)

தமிழினைக் காப்பே னென்ருன் — அவன்
தமிழகம் மீட்பே னென்ருன்!
உமியென்ன ஆரியரை — நான்
ஊதித் தொலைப்பே னென்ருன் (வேலி)

நாடோடியாக வந்தே — இங்கு
நூற்றுக்கு மூன்று பேர்கள்
நாட்டினை நாசமாக்கப் — பார்த்து
நான் சும்மா இரேனென்ருன்! (வேலி)

சாடிடு வேன் அன்னாரின் — பொய்
சாத்திரப் புராணங்களை;
ஓட அடிப்பே னென்ருன் — பின்னும்
ஒழிக்காமல் தூங்கே னென்ருன்! (வேலி)

சாதிகள் உண்டென் போரை — காரித்
தூவென நுமிழ்வே னென்ருன்!
வேதியக் கூட்டத்தாரை — உடனே
வெளியேற்றப் போறே னென்ருன்! (வேலி)

பெரியார் படையோன் என்ருன்—இப்போ
போர்க்களம் போறேன் என்ருன்
வருந்துதென் உள்ளமடி — அவனைக்காணும்
வழியென்ன சொல்லடி நீ! (வேலி)

போர்க்களம் எங்கே யடி — நானும்
போகத் துணிந்திட் டேண்டி
ஆர்க்கும் முரசம் அதோ — என்னை
அழைக்கு தடி ஒலித்தே! (வேலி)

எண்ணி இதயத்தில் இன்பத்தைத் தேக்கியிரு
கண்ணிமையை மூடிக் களித்திருப்பேன் சின்னேரம்!
புன்னை மரப்பொந்தில் பொரித்தஇளங் கிள்ளையுடன்
அன்னைக் கிளிவந்(து) அழகுமொழி பேசுகையில்
அத்தான்! எனவழைத்(து) ஆசையுடன் என்முன்னால்
கொத்தாக் கனிசுமக்கும் கொம்பாய்நீ வந்தருகில்
உள்ளாயென் றெண்ணும் உவகையினால் நெஞ்சிடையே
மெள்ள வருமூச்சால் மெய்மறப்பேன் சின்னேரம்!......
கட்டவிழ மாட்டாத கன்னியிளந் தாமரையைத்
தொட்டு முகைஉடைக்கும் தும்பியைநான் கண்டவுடன்
மாலையிலே அன்றோர்நாள் மாமரத்தோப் புள்ளேநான்
வாலைக் குமரிஉனை வந்தணைத்து முத்தமிடச்
சேலைத் தலைப்பாலுன் செம்மைபடர் கன்னத்தை
மேலாத் துடைத்துநின்ற முன்நிகழ்ச்சி என்நினைவில்
வந்து குமிழியிட, வாட்டமொழித்(து) இன்பம்செய்
அந்த நினைவாக அமர்ந்திருப்பேன் சின்னேரம்!
ஆலமரக் கொம்பின்மேல் அன்பாய் இளமாலைக்
காலமதில் வந்தமரும் காதற் புறவிரண்டில்
பேடை தலைவருடிப் பேராசைச் சேவல்பின்
சாடை புரிந்திறகால் சார்ந்தணையும் பேரெழிலின்
காட்சி தனைக்காண்பேன்; காவிரியின் ஓரமதில்
மாட்சிதரும் காதல்உரை மங்கையுன்னோ டேயிருந்து
பேசிக் களித்த பெருநினைவும்; வெண்ணிலவில்
நேசமுடன் நீயெனது நெஞ்சிற் றலைசாய்த்தே
ஆசை மொழிகூறி அணைத்ததுவும் நீயெனக்கே
ஓசை எதிரொலிக்க ஒன்றொன்றாய் முத்தமிட்ட
செய்தியெலாம் நெஞ்சத்தில் சேர நினைப்பதினால்
எய்துமோர் இன்பத்தில் எக்களிப்பேன் சின்னேரம்!
எண்ணிஉனை இவ்வா(று) இருந்திடவும் நீண்டகயற்
கண்ணிநீ நெஞ்சில் கனல்மூட்டி வாட்டாமல்
தோட்டத்து மூலையிலே தூங்குபலா வேரின்கீழ்
கூட்டம் நிகழ்த்தக் குறித்த இடமதற்கு
வந்திடுவாய்! காதல் வழங்கிடுவாய்! கொள்ளையாய்த்
தந்திடுவாய் இன்பம் தனை!

செய்தி

குருவிக்கரம்பையில் கொள்கை முழக்கம்

10-3-59 செவ்வாய் மாலை 7 மணிக்குப் பேராவூரணி அருகிலுள்ள குருவிக்கரம்பையில் பட்டுக்கோட்டை விசுவநாதன் அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் திராவிடர்கழகப்பொதுக் கூட்டம் நடந்தது. அதுபோது நாகை, S. S. பாட்சா – பட்டுக்கோட்டை, டேவிசு முதலானோர் பேசினர். அதன் பின் பேசிய-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழன்னையின் ஒரே வயிற்றிற் பிறந்த மக்கள் நாம். நமக்குள் உயர்வு தாழ்வு கிடையாது. சாதிமத பேதங்கள் ஆரியரால் கொண்டு வரப் பட்டன. இதனால் தமிழர்க்கு ஏற்பட்ட தவிப்பு நிலை தீரவேண்டும். –இதனை உணர்ந்து, தமிழக மீட்சியில் தமிழர் ஒவ்வொருவரும் பங்கு கொள்வோமாக என்று கூறி முடித்தார். தலைவர் நன்றி நவில-கூட்டம் முற்றுப்பெற்றது.

செய்தி அறிவிப்பாளர்.

வாளினை ஏந்தும்கைகள்!

இராஜம் குப்புசாமி, சென்னை.

வாகைசூடிய வீரனை யன்றோ - தமிழ்
வஞ்சியர்கள் மணந்திட்டார்! (வாகை)

ஈகை நிறைகுணம் உள்ளோர்
அவர்களைத் தீண்டல் எளிதோ
நாகத்தின் பண்பினைக் கொண்டோர்
நெருங்கிடில் நஞ்சை யுமிழ்வார்! (வாகை)

கணவர்க்குத் தீங்கெனில் அன்னார்
களத்தில் இறங்கிப்போர் செய்வார்!
சுணக்கம் சிங்காரம் வெறுப்போர்!
தமிழ்ப்பண்பினை மாளாது காப்போர்! (வாகை)

இனிமைப்பண் பாடிடும் செவ்வாய்
யாழினை மீட்டிடும் கையார்!
கனிச்சுவை யன்ன உணவைக்
கருத்துடன் செய்து படைப்போர்! (வாகை)

பிள்ளைக்குப் பாலூட்ட மார்பில்
அள்ளி அணைத்திடும் தாய்மை!
புள்ளிமானின் மென்மை கொண்டோர்!
கொள்ளை இன்பந்தரும் பெண்கள்! (வாகை)

அலர்கண்டு அஞ்சி நடுங்கார்!
அன்னை நாட்டினைக் காத்திடற்காக!
மலர்புனை மெல்லிய கையில்!
வாளினை ஏந்திப்போர் செய்வார்! (வாகை)

கொள்கை முழக்கம்!

★ பட்டுக்கோட்டை இராசேந்திரன் ★

கெட்டது நம்நிலை செந்தமிழ் மக்களே
கேடு களைந்திட வாரீர் - நம்பால்
நட்டகல்லில் தெய்வம் உள்ளதென்றே சொல்லி
நாளும் பிழைத்தஅப் பார்ப்பார் - நம்மை
எட்டநில் எட்டநில் என்றுசொன்னார் நாமும்
ஏழடிக் கப்பாலே நின்றோம் - அவர்
கோட்டத்திற்குத் தலை இன்னும் குனிவதோ?
கொள்கை முழக்குவோம் வாரீர்!

வாடுகிறார் தமிழ் மக்களிங்கே; அங்கே
வாழுகிறார் பிற நாட்டார் - அன்று
நீடு புகழ்பாடி வாழ்ந்த தமிழன்கண்
ணீர்சிந்த லாயினன் இன்று - கையில்
ஓடு பிடித்துநம் நாட்டை மிதித்தவர்
ஓடு கொடுத்தார்ந மக்கே - தமிழ்
நாடு பிரிந்திடில் கேடுமக் கேயென
நாத்திறங் காட்டத்து ணிந்தார்!

தீது புரிந்தனர் நம்மவர்க்கே அந்த
தொல்லைகள் போக்கிட வேண்டும் - எப்
போதும் இதுபோல்நாம் வாழ்ந்ததில்லை இன்றே
போர்ப்பறை கொட்டுவோம் வாரீர் - தப்
பேதும் இதிவில்லை; குந்தி யிருந்துவீண்
பேச்சுக்கள் பேசுதல் வேண்டாம் - சில
சேதுக்களும் தெ.போ. மீக்களுமே தமிழ்
சீர்த்தியை வீழ்த்துதல் கண்டோம்!

முப்புரி நூலினர் உயர் துறைக்கெலாம்
முந்தி அமருதல் கண்டும் - கேள்
அப்பா இராமன்க தையெனில் ஓடோடி
அதற்கு முந்திட லானீர்! - நமக்
கொப்பிங்கே யாருளார்? செந்தமிழ்ச் சிங்கங்காள்!
ஒன்று திரளுவோம் வாரீர் - பிற
அப்புறம் ஆகட்டும்! இன்று தமிழ்நாட்டிற்
காவன செய்வதே நன்று!!

ஏனடா இந்நிலை? எழும்படா போருக்கு!

தங்க-கலைக்கோவன், துவரங்குறிச்சி.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு-நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் தந்த சேரன் இளவல் இளங்கோ வாழ்ந்த நாடு; இமயத்திலே கொடி நாட்டி இறுமாப்புக் கொண்ட கனக-விசயரின் தலையிலே கல்லேற்றி கற்புக்கரசிக்கு விழாக்கண்ட கன்னித் தமிழ்நாடு - இன்று குமரிமுதல் இமையம்வரை கொடிகட்டி ஆண்ட பரம்பரை குறுகி நிலைகுலைந்து நிற்கிறது. கடாரம், யவனம் சாவகம் சென்று கன்னல் தமிழின் பெருமையைக் காட்டியவர்களின் பரம்பரை கண்மூடிக் காலங்கழிக்கிறது. முச்சங்கம் கண்டு முத்தமிழ் வளர்த்த மரபு முடிதாழ்த்தி அடி பணிந்து கிடக்கிறது. அள்ளி அள்ளிக்கொடுத்த அதியனின் வழிவந்தோர் இன்று அயலவனின் கரத்தை எதிர்நோக்கிக் கொண்டிருப்பது ஏன்?

ஏன் இந்நிலை?

ஆளுக்கொரு கட்சியும், நாளுக்கொரு கொள்கையுமாய் மாற்றிக்கொண்டு ஆரியரின் காலடிகளைக் கழுவிக்குடித்து, ஒற்றுமையைக் குலைத்து, நற்றமிழை - நன்மக்களைச் சிதைத்து கூட்டம் போடுவதும், கும்மாளமடிப்பதுமாய் இருந்தால் எப்படி நாடு உருப்பட முடியும்?

நான் தமிழன், நான் பிறந்தது தமிழ் நாடு, தமிழ் எனது உயிர் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? வாய்ச்சொல் வீரர்களாக வாழ்ந்தது போதும் செயலில்காட்ட முன்வாருங்கள்.

தொன்மைமிக்க தமிழர் தூங்குவதைக்கண்டு தானே காசுமீரத்துப்பண்டா நம் தலைவரை 'நாட்டைவிட்டு வெளியேறு' என்று சொல்ல நேர்ந்தது. 'காட்டு மிராண்டி'களாம் நாம்! அடுக்குமா இந்த அவச்சொல்? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழரா 'காட்டு மிராண்டிகள்?'

ஆட்டை ஓட்டிப் பிழைக்கவந்த கூட்டம் நம்மைக் காட்டுமிராண்டிகள் என்று சொல்லும் அளவுக்கு வந்துவிட்டதே காரணமென்ன?

வள்ளுவரின் குறளும் ஆச்சாரியார் உரையும்

தகட்டூர், மா. இராமலிங்கம்.

அன்று முதல் இன்றுவரை, சீர்கெழு செந்தமிழுக்குக் கேடு சூழப் பார்ப்பனர்கள் தயங்கியதே இல்லை. தங்கள் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் தமிழர்களிடையே புகுத்த அவர்கள் தமிழ் இலக்கியங்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டனர். அத்தகையபண்புபடைத்த குள்ளநரிக் கூட்டத்தில் நம் ஆச்சாரியப் பெருந்தகையாரும் ஒருவர்.

கீதைதான் இந்த நாட்டின் நலனுக்குப் பாதை காட்டும் என்று எண்ணினார்; "கண்ணன் காட்டிய வழி"யைத்திட்டினார். பாரதக் கதையை எழுதுவதன் மூலம் மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தலாம் என்றெண்ணி "வியாசர் விருந்து" என்னும் "அக்ரஹார விருந்தை" அளித்தார். அதன் பின்னர் இராமாயணம் என்னும் பழைய சரக்கையே "சக்கரவர்த்தித் திருமகன்" என்னும்பெயரிலே எழுதித் தந்தார். அதனைத் தமிழ் வளர்க்கும் கல்கி ஏடு—அல்ல—தமிழால் வளர்ந்த 'கல்கி' ஏடு வெளியிட்டு அவரைப் பெருமைப் படுத்தியது.

"என்னுடைய லட்சியம் நிறைவேறிவிட்டது. நான் இறப்பதற்குள் கீதை, பாரதம், இராமாயணம் மூன்றையும் எழுத நினைத்தேன்; எழுதியும் முடித்துவிட்டேன்" என்று கூறிப் பெருமைப் பட்டுக் கொண்டார் ராஜாஜி.

அவையெல்லாம் கூட நம்முடைய கவனத்தைக் கவரவில்லை. இப்பொழுது அவர் 'கல்கி'யிலே திட்டிவரும் "வள்ளுவர் வாசகமே" நம்முடைய கவனத்தையும் கவலையையும் ஒருங்கே திருப்பியிருக்கின்றது.

கீதையும், பாரதமுமே இலக்கியங்கள் என்று எண்ணி வந்த ஆச்சாரியார் தெள்ளுதமிழ்க் குறளுக்கு விளக்கம் எழுத முனைந்திருப்பது விந்தையிலும் விந்தை. குறளைப்பற்றி எழுதுவதன் மூலம் தமக்கிருக்கின்ற 'தமிழ்ப் புலமை'யையும், 'தமிழ்ப்பற்றை'யும் காட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ?

ஆச்சாரியப் பெருந்தகைக்கு ஏனோ இந்த 'ஞானோதயம்' ஏற்பட்டிருக்கிறது-குறளுக்கு விளக்கம் எழுதித் தமிழ்த்தாயைப் பாதுகாக்க வேண்டுமென்று!

ஆச்சாரியார் போன்றவர்கள் தமிழ் இலக்கியத்தை நோக்கித் தங்கள் பார்வையைத் திருப்புகிறார்கள் என்றால், அது தமிழ்த்தாயை வாழ வைப்பதற்காக அல்ல என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

ஆச்சாரியாரின் உடலிலே ஓடுவது ஆரியக் குருதிதானே? பிறகென்ன—'வள்ளுவர் வாசகத்தில்' தனது வைதிகக் கருத்தையும், வருணாசிரமக் கொள்கையையும் காட்டாமலா இருப்பார்?

'வள்ளுவர் வாசகத்தில்' ஆச்சாரியார் தன் 'பார்ப்பனப் புத்தியை'க் காட்டியிருப்பதற்குச் சான்றாக ஒன்று கூறி விளக்குவோம்.

நமது இளிச்சவாய்த் தனத்தைக் கண்டு கொண்டு இப்பொழுது இந்தியையும் புகுத்திவிட்டனர். அருமைத் தமிழிருக்க - இந்தியில் 'ஆகாஷ் வாணி' என்று அலறிக்கொட்டுகின்றனர். ஏன், தமிழ் என்ன தாழ்ந்துவிட்டதா? இல்லை இந்தியைப் போல் தரங்கெட்டுவிட்டதா?

உண்மைத் தமிழனென்றால் ஏனடா நீ உறங்கி விழவேண்டும்? நாட்டுக்கொரு பெரியாரும், நல்ல புரட்சிக் கவிஞரும் நாவலரும் பாவலரும் இருக்கையில் நீ ஏன் உறங்கிச் சாகிறாய்? விழிப்படைந்து புறப்படு! வாய்ச்சொல் வீரனாக இருக்க ஆசைப் படாதே; ஆவல் கொள்ளாதே! அடிமைத் தளையை அறுத்தெறி! அறியாமையை சுட்டுப்பொசுக்கு சாதிக்கொடுமையை சாக்கடைக்குள் தள்ளு; ஏனப்பா நீ இன்னும் ஆரிய தாசனாய் இருக்க விரும்புகிறாய்? உன் தாயை அயலவன் அடைய எண்ணும்போதுநீபார்த்துப் பல்லிளித்துக்கொண்டு இருப்பாயா? ஏன் உன் கண்கள் சிவப்பேறுகிறது. இப்படிச் சொல்லுகிறேனென்றா? என்னிடம் பாயாதே; இந்தி வெறியர்களிடம் பாய்ந்துசெல்! போடா, போ... போ... போ... ஏனடா இந்நிலை உனக்கு? எழும்படா போருக்கு!

இடி விழுந்தாற்போன்ற உணர்ச்சி- படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்தேன். என் கனவு எப்பொழுது நனவாகுமோ?

குறளுக்கு உரைஎழுதிய பெருமக்கள் பலர். எழுதப்பட்ட உரைகள் அத்தனையும் என்றும் போற்றப்படும் நிலையிலேயே அமையவில்லை. சிறப்புடையதென்று கருதப்பட்ட பரிமேலழகர் உரை இன்று செல்வாக்கு இழந்து வருகிறது: காரணம் வள்ளுவரின் கருத்தை உணராது தன் மலம்போன படி பல இடங்களில் திரித்து உரை கூறியதாகும். இதுபோலத் தவருக உரை எழுதியவர்கள் எல்லாம் காலத்தால் புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள்.

சிறந்த உரையாசிரியர்களான நக்கீரனுர், இளம்பூரணர், பேராசிரியர், சேனுவரையர் முதலியவர்களின் வரிசையிலே வைத்து எண்ணப் படத்தகுந்த நச்சினர்க்கினியர் பத்துப்பாட்டுக்களில் ஒன்ருன 'முல்லைப்பாட்டு'க்கு உரை எழுதுங்கால், பாட்டைப் பலவாறு சிதைத்து, உருத்தெரியாது ஆக்கிவிட்டார். மேலும் பொருள்வயிற் பிரிந்த தலைவன் "கார்ப் பருவத்தே மீண்டும் வருவல்" என்று கூறிப்பிரிய அது கண்ட தலைவி அவன் வருந்துணையும் ஆற்றியிருத்தல் என்னும் முல்லைத்திணைக்குப் புறம்பாக ஆசிரியர் மதுரைப் பொன் வாணிகனுர் மகனுர் நப்பூதனுர் 'பூப்போலுண்கண் புலம்புமுத் திறைப்ப' என்று எழுதியிருப்பதால் அது நெய்தற்றிணையாக ஆகிவிட்டது என்றும் அதனுல் பாட்டுக்கு 'முல்லைப் பாட்டு' என்றபெயர் எங்ஙனம் சாலும் என்பது சிந்திக்கற்பாலதாம் என்னும் ஐயத்தையும் எழுப்பி மறுப்பளித்து எழுதியஉரை, பிற்காலத்து மறைமலையடிகள் போன்ற தமிழ்ப்பெருமக்களால் ஏலாவுரை என்றே துணியப்பட்டது. இதுபோன்று முறைபிறழ உரை கூறிய நச்சினர்க்கினியரே காலத்தால் புறக்கணிக்கப்பட்டிருக்கிருர் என்ற உண்மை ஆச்சாரியாருக்குத் தெரிந்திருந்தால் இங்ஙனம் அவர்தம் இனப்புத்தியைக் காண்பித்திருக்கமாட்டார்.

3-11-57 கல்கி இதழில் ஆச்சாரியார் "மனத்துக்கண் மாசிலனுதல்—அனைத்தறன்-ஆகுல நீர பிற" என்ற குறளுக்கு விளக்கம் எழுதியிருக்கிருர்.

அதுதான் இது:

"பக்தியும், பூஜையும் எவ்வளவு நீடித்தாலும் அதற்கெல்லாம் வேண்டியது, தீய கருத்துக்களுக்கு இடங்கொடுக்காமல் உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வது. இது செய்துவிட்டால் எல்லாம் நிறைவேறிவிடும். உள்ளத்தைப் பரிசுத்தமாக வைப்பதில் தருமம் முழுதும் அடங்கும். இந்த சுத்தநிலை ஏற்பட்டால் பக்தியும், பூஜையும் வெறும் ஆரவாரம், சத்தமும் பகட்டும் தடபுடலுமே - என்கிருர் முனிவர்.

"செயல்களுக்கு வித்து மனதில் தோன்றும் எண்ணங்கள். மனம் சுத்தமாக இருந்தால் செயல் தானுக அறவழியில் செல்லும். பக்தியும் பூஜையும் உள்ளத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான். மாசற்ற உள்ளத்தைப் பெறுவதற்காகவே பக்தியும் பூஜையும் உள்ளத்தைத் துப்புரவாக வைப்பதற்குப் படாடோபம் ஏதும் வேண்டுவதில்லை. 'ஆகுலம்' என்ருல் - ஆரவாரம், படாடோபம்"

- கல்கி 3-11-1957

இதுதான் ஆச்சாரியார் கொடுத்த விளக்கம்.

'அவாள் வந்தா, இவாள்போனு' என்று அம்மாமித் தமிழில் பழகிய ஆச்சாரியார்-பூஜை, சுத்தம் தர்மம் என்றெல்லாம் வடசொல் கலந்தெழுதி விட்டார் என்று நாம் குற்றம் சாட்டவில்லை. காரணம் "பல்லுடைக்கும் பண்டிதர் எழுதத்தான் வேண்டுமா? கொச்சைத்தமிழில் எழுதினுல் என்ன குறைந்தாபோய்விடும்? நான் ஆங்கிலம் பேசுவதும் கா. சு. பிள்ளை தமிழ்பேசுவதும் ஒன்றுதான்; இரண்டும் சதாரண மக்களுக்கும் புரியாது" என்று வரட்டு வேதாந்தம் பேசிய வ. ரா. வின் இனந்தான் ஆச்சாரியாரும் என்பது நமக்குத் தெரியாத ஒன்றல்ல. அது போகட்டும்.

ஆச்சாரியார் கூறுகிருர்,

"பக்தியும், பூஜையும் உள்ளத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான். மாசற்ற உள்ளத்தைப் பெறுவதற்காகவே பக்தியும், பூஜையும்" என்று.

மனத்துக் கண் மாசிலனுதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்ற குறளில் வள்ளுவர் மேற்காட்டிய கருத்தையா வலியுறுத்துகிருர்? பின்னர் ஏன் ஆச்சாரியார் அத்தகைய வரிகளை எழுதியிருக்கிருர்? எண்ணிப் பார்க்க வேண்டும் நாம்.

"அவ்வாற்ருன் அறஞ்செய்வான் தன் மனத்தின்கண் குற்றமுடையனல்லனுக; அவ்வளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய என்றவாறு."

இது பரிமேலழகர் கூற்று.

"ஒருவன் தன்மனத்தின்கண் குற்றமிலனுதலே எல்லா அறமுமாம்; அதில் அழுக்குண்டாயின் மேற்செய்வனவெல்லாம் ஆரவார நீர்மைய என்றவாறு."

இது மணக்குடவர் கூறும் பொருள். ★

(தொடர் அடுத்த இதழில்.)

பெண் கல்வி!

காரை, அலி.

முடக் கொள்கை முட்காடாய்
முத்த மிழ்நா டிலங்குவதை
யேடா தமிழா காணுயோ?
எத்தித் தள்ள வாராயோ?
மாடே போன்று வாழ்கின்ருய்!
மானம் வெட்கம் இல்லையோ?
நாடு செழிக்கத் தமிழ்க்கல்வி
நற்றேன் உண்டு தெளிவாயே!

சாதிக் கேஓர் சமுதாயம்
சாற்றி நிற்கும் சழக்கனே!
மேதி போல்அச் சேற்றினிலே
மிதித்துச் சிக்கிக் கெட்டாயே!
ஆதித் தமிழர் சமுதாயம்
ஆணும் பெண்ணும் சமத்துவமாய்
நீதி யாக வாழ்ந்தநிலை
நினைத்துப் பார்த்து மதிபெறுவாய்!

'மன்பதை தன்னில் பெண்ணினத்தை
மதிக்க வேண்டும் ஆடவர்கள்
என்பதை மறந்த காரணத்தால்
ஏற்ற மற்ருய் உண்மையன்றே?
அன்பைப் பெருக்கும் அன்னைமார்
அற்ருர் கல்வி; சூழ்ச்சியினுல்!
இன்பைப் பெற்ருய் விலங்கேபோல்!
இன்னுர் உயர என்செய்தாய்?

பெண்ணகம் மாசு பட்டதனுல்
பெருத்த சேதம் தமிழுக்காம்!
எண்ணகம் இதனை உணர்ந்திட்டால்
எங்கும் இன்பம் இன்பமே!
மண்ணகம் திருந்தல் மங்கைமார்
மதிந லத்தால் என்பதனைத்
தண்ணகம் படைத்த தமிழாநீ
தமிழ்நா டெங்கும் அறைவாயே!

கல்லாப் பெண்கள் இல்லையெனும்
கவினுர் நிலைமை உண்டானுல்
பொல்லாப் பூசல் சாதிமதம்
பொன்றும்; அடிமைப் பேயொழியும்;
எல்லாத் துறையும் மதிநிலவும்;
எனவே, தமிழா நீசென்று
இல்லந் தோறும் பெண்கல்வி
இறைமை பற்றிப் புகல்வாய்,போ!

எது முதற்பணி?

செ. கிருஷ்ணசாமி, அரக்கோணம்.

எப்பணி முதலாகும் - மக்கள்
ஏற்றம் எய்திடவே (எப்)

கண்ணுக்(கு) ஒளிமுதலா - கவின்
காட்சி காட்டுவதா
பண்பைப் பரப்புவதா - தோழா!
பணத்தை நிறப்புவதா? (எப்)

செல்வம் கல்விக்கா - இன்பம்
வானில் எனச்சொல்லும்
கல்லுக் குருகுவதா - கதறும்
மக்கட் கிரங்குவதா? (எப்)

தேரைக் கட்டுவதா - தோழா!
தெருவைத் திருத்துவதா
வீரம் பேசுவதா - நமக்குள்
ஒற்றுமை வேண்டுவதா? (எப்)

சமைத்துப் போடுவதா - வயிற்றின்
நோயைத் தடுப்பதுவா
உமக்குச் செப்புவதா - நானே
உழைத்துக் காட்டுவதா? (எப்)

நல்ல விதைஎன்ருல் - பலன்
நல்கும் எனநாடி
கல்லில் போடுவதா - மேட்டைக்
கழனி ஆக்குவதா? (எப்)

முள்ளை எடுக்காமல் - காலில்
மருந்து போடுவதா
பள்ளுப் பாடுவதா - காதில்
பஞ்சை அடைத்தவர்முன்! (எப்)

குயில் வளர்ச்சிக்கென, முத்துப்பேட்டைத்
தேவதானம், சி. சிவாநந்தம் அவர்கள்
2 ருபாயும், தஞ்சை S. நடராசன்
அவர்கள் 1 ருபாயும் அனுப்பி
யுள்ளனர். வரப்பெற்ருேம்.
நன்றி.

— அமைச்சர்.

குயில்

Regd. No. M. 7030.

புகழைத்தேடு

சோறு வேண்டும் துணிவேண்டும் - நல்ல
கூறை வேண்டும்வே றென்ன வேண்டும்? (சோறு)

ஆறுசெல்ல ஊர்தி வேண்டு மெனில்
அதுபெற்ற பின்பும் ஆசையா தூண்டும்? (சோறு)

ஈறு வேண்டும்உன் ஆசைக்கு! மேன்மேல்
ஏற்றம் வேண்டினால் புகழ்தேட வேண்டும்
நாறுவேண்டும் மலருக்கு! நீ தமிழ்
நாட்டுக்கு நாளும் உழைத்திட வேண்டும் (சோறு)

புகழாசை கொள்ளுக; பொருளாசை தள்ளுக!
புகழொன்றே நிலைஎன்ற தேவர்சொல் எண்ணுக!
இகழ்வரும் மிகுபொருள் தேடுங்கால்! தமிழ்மீட்பில்
என்ன நேர்ந்தாலும் அவைஎலாம் இன்பமே (சோறு)

அழகிய இயங்கியில் நீ செல்லுகின்றாய்;
அடிமை என்றுனைப் பிறன் சொல்லுகின்றான்!
பழுது போக்கித் தமிழகம் மீட்பையேல்
பார்ப்பான் நல்லதோர் தமிழனைப் பார்ப்பான் (சோறு)

தமிழன் உயர்ந்தவன் என்றுசொல் கின்றாய்;
தமிழன் வீரன் என்றுசொல் கின்றாய்;
தமிழன் அடிமை எனும்பழி போக்குங்கால்
தமிழா உன்புகழ் நிலையாக்கு கின்றாய்! (சோறு)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.